


# சமாரியர்களின் சாட்சி

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 4:1–42; 3:26–30; எரே 2:13; சக 14:8; எசேக் 36:25–27.

**மனன வசனம்:** அந்த ஸ்திரீயைநோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள். யோவான் 4:42.

சமாரியர்கள் யார்? கி.மு. 722இல் இஸ்ரவேலின் வட ராஜ்யத்தை அசீரியர்கள் கைப்பற்றினார்கள். அரசியல் நிலையை உறுதிப்படுத்த, சிறைக்கைதிகளைத் தங்கள் ராஜ்யம் முழுவதிலும் பரவிப்போகச் செய்தார்கள். அதுபோல, பிற தேசங்களில் சிறைப்பிடித்தவர்களை வடராஜ்யத்தில் குடியேற்றினார்கள்; அவர்களே சமாரியர்கள்; அவர்கள் தங்களுக்கென்று சில யூதேயமுறைகளை வகுத்துக் கொண்டார்கள்.

ஆனாலும் அவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே உறவுச்சிக்கல் இருந்தது. உதாரணமாக, யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பிவந்து, தேவாலயத்தை மறுபடியும் கட்ட ஆரம்பித்தபோது, சமாரியர்கள் அதற்கு எதிராகச் செயல்பட்டார்கள். மேலும் தங்களுக்கென ஒரு தேவாலயத்தை கெரிசீம் மலையில் கட்டினார்கள். ஆனால் இந்த ஆலயத்தை யூத ஆட்சியாளரான ஜான் ஹிர்கேனஸ் கி.மு. 128இல் அழித்தார்.

கிறிஸ்துவின் காலத்திலும், இந்தப் பகை தொடர்ந்தது. யூதர்கள் முடிந்தவரை சமாரியாவுக்குச் செல்லாமல் தவிர்த்தார்கள். வணிகத் தொடர்பு இருந்தாலும்கூட, பிற தொடர்புகள் தடைசெய்யப்பட்டன. யூதர்கள் சமாரியர்களிடமிருந்து கடன் வாங்கமாட்டார்கள்; எந்த உதவியும் பெறமாட்டார்கள். இந்தச் சூழலில்தான், இயேசுவுக்கும் கிணற்றருகே வந்த பெண்ணுக்கும், சீகார் எனும் சமாரியப்பட்டணத்தின் மக்களுக்கும் இடையே நடந்த உரையாடல்களை யோவான் பதிவுசெய்கிறார்.

*2024 நவம்பர் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சந்திப்புக்கான சூழலை உருவாக்குதல்

**என்ன விவகாரத்தை முன்னிட்டு இயேசு சமாரியா வழியாகச் சென்றார்? யோவான் 4:1-4.**

---

யோவான் ஸ்நானனைக் காட்டிலும் இயேசுவின் சீடர்கள் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதாக பரிசேயர்கள் அறிந்தார்கள். இந்தச் சூழ்நிலை இயேசுவின் சீடர்களுக்கும் யோவானின் சீடர்களுக்கும் இடையே பதற்றத்தை உண்டாக்கக்கூடும். யோவானின் சீடர்கள் இயல்பாகவே தங்கள் குருவின் மதிப்பு குறித்தும், அந்தஸ்து குறித்தும் அதிக அக்கறையுடன் இருந்தார்கள். ஒப்பிடவும்: யோவான் 3:26-30. ஆனால் இயேசு பெருகவும், தான் சிறுகவும் வேண்டுமென்று யோவான் பதிலளிக்கிறார். யோவான் 3:30. பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக இயேசு யூதேயாவை விட்டு கலிலேயாவுக்குச் செல்லுகிறார். யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு சமாரியா வழியில் நேரடியாகச் செல்லலாம்; ஆனால் வேறு வழிகளும் இருந்தன. யூதமார்க்கத் தீவிரர்கள், கிழக்குத் திசையில் பெரேயா வழியாகச் சுற்றித்தான் செல்லுவார்கள்.

**கிணற்றண்டை வந்த பெண்ணுடன் பேச்சைத் துவங்குவதற்கு இயேசு எவ்வாறு அந்த வாய்ப்பைப் பயன்படுத்தினார்? யோவான் 4:5-9.**

---

யாக்கோபின் கிணறு சீகேமுக்கு அருகே இருந்தது; ஆனால் அந்தப் பெண்ணின் ஊராகிய சீகார், சுமார் 1 மைல் தூரத்தில் (1.5 கி.மீ) இருந்தது. சீடர்கள் உணவு வாங்கிவர பட்டணத்திற்குள் செல்ல, இயேசு அந்தக் கிணற்றருகே உட்கார்ந்தார். அந்தக் கிணற்றின் குளிர்ந்த நீரை மொள்ள அவருக்கு வாய்ப்பில்லை. அந்தப் பெண் தண்ணீர் மொள்ள வந்தபோது, அவளிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டார்.

யோவான் 3இல், யூதர்களின் அதிகாரியும் ரபியுமான நிக்கொதேமு, தன்னைத் தாழ்த்தி இயேசுவிடம் வந்தார். யாரும் பார்க்கக்கூடாதென இரவில் வந்தார். ஆனால் யோவான் 4இல், அந்தப் பெண் பகல் வேளையிலேயே ஒளிந்து வருகிறாள்; ஒருவேளை, காலையிலோ மாலையிலோ குளிர்ச்சியான வேளையில் அங்கு வரக்கூடிய பெண்கள் தன்னைப் பார்க்காமல் இருக்க அவ்வாறு வந்திருக்கலாம். ஆனால் நீண்ட தூரத்திலிருந்து, உஷ்ணமான மதிய வேளையில் அவள் ஏன் வரவேண்டும்? காரணம் எதுவாக இருந்தாலும், இயேசுவோடான சந்திப்பு அவள் வாழ்க்கையை மாற்றவிருந்தது.

அடுத்து என்ன நிகழ்கிறது? ஒரு யூதபோதகர், சமுதாயத்தில் மதிக்கப்படாத ஒரு பெண்ணிடம் இறங்கிச் சென்று பேசுகிறார். எத்தகைய மாறுபட்ட காட்சி! இந்தப் பின்னணியில் அற்புதமான ஓர் உரையாடல் நிகழ்கிறது.

---

**உங்களுடைய கலாச்சாரத்தில் நீங்கள் சாட்சிபகர முடியாமல் செய்கிற சில சமுதாயத் தடைகள் என்ன? அவற்றைக் கடந்துசெல்ல என்ன செய்யலாம்? உங்கள் பதிலை ஓய்வுநாள் வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.**

# கிணற்றருகே வந்த பெண்

**அந்தப் பெண்ணிடம் சாட்சிபகருவதற்கான ஒரு தருணமாக அந்தச் சந்திப்பை இயேசு எவ்வாறு மாற்றினார்? யோவான் 4:7-15.**

---

யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையே இருந்த வெறுப்பானது இயேசுவிடம் அவள் பட்சமாக நடக்கவிடாமல் தடுத்தது; ஆனால் அந்த இருதயத்தையும் அணுகுவதற்கான வழியை இரட்சகர் கண்டுபிடிக்க முயன்றார்; தெய்வீக அன்பால் பிறந்த ஓர் உத்தியைப் பயன்படுத்தி, அவளுக்கு உதவி செய்யாமல், அவளிடம் உதவி கேட்டார். உதவச் சென்றிருந்தால், அதை ஏற்றுக்கொள்ள அவள் மறுத்திருக்கலாம்; ஆனால் நம்பிக்கேட்டது நம்பிக்கையை எழுப்புகிறது.

நிக்கொதேமுவைச் சந்தித்தபோது நடந்ததுபோலவே, இங்கும் அவள் இருதயத்தில் இருந்ததை இயேசு அறிந்திருந்தார். ஒரு சமாரியப் பெண்ணிடம் ஒரு யூதர் உதவிகேட்டதுபற்றி அவள் ஆச்சரியப்படவே, இயேசு நேரடியாக விஷயத்திற்குச் செல்லுகிறார். 'தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவதண்ணீரைக் கொடுத்திருப்பார்' என்றார். யோவான் 4:10.

புதிய பிறப்புபற்றி, 'இவைகள் எப்படி ஆகும்' என்று நிக்கொதேமு கேட்டதுபோலவே, அந்தப் பெண்ணின் எதிர்வினையும் இருந்தது. 'மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்' என்று கேட்டாள். யோவான் 4:11. இந்த இரு சம்பவங்களிலும் (ஒருவர் ஒரு முக்கிய யூதபோதகர், இன்னொருவர் நற்பெயர் பெற்றிராத ஒரு பெண்), அவர்கள் கேட்டு, புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய ஆவிக்குரிய உண்மைகளை இயேசு சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொருவரிடமும் இயேசு சொன்ன விஷயம் ஒன்றுதான்: அவர்களுக்கு ஒரு மனமாற்ற அனுபவம் அவசியம் என்றார்.

**ஜீவத்தண்ணீர்பற்றி இயேசு பேசினதற்கான பழைய ஏற்பாட்டுப் பின்னணி என்ன? எரே 2:13; சக 14:8.**

---

தண்ணீரில்லாமல் மனிதர்கள் உயிர்வாழ முடியாது; அதனால்தான் நித்திய வாழ்வைச் சுட்டிக்காட்டுகிற சரியான உருவகமாக தண்ணீர் இருக்கிறது. அதனால்தான் இயேசு, 'நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்' என்று சொல்லுகிறார். யோவான் 4:14.

---

**யோவான் 7:37,38இல் இயேசு சொல்லுவது என்ன? அங்கே அவர் வாக்குரைப்பதை நாம் எவ்வாறு அனுபவிக்கலாம்?**

# அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்

'அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்'. எசே 36:25-27.

**நிக்கொதேமுவிடமும் கிணற்றருகே வந்த பெண்ணிடமும் இயேசு சொல்ல முயன்ற சத்தியங்களை எசே 36:25-27 எவ்வாறு வெளிப்படுத்துகிறது?**

---

இரு சம்பவங்களிலும், இயேசு அவர்களுக்கு ஆவிக்குரிய சத்தியங்களைச் சொல்ல முயன்றார்; அதற்கு இயற்கை உலகிலிருந்து எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தினார்.

முதலில், இருவருமே இயேசு சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை. 'ஒரு மனிதன் எவ்வாறு மறுபடியும் பிறக்கமுடியும்? எவ்வாறு தன் தாயின் கருவுக்கு மீண்டும் திரும்பமுடியும்?' என்று நிக்கொதேமு கேட்டார். இயேசு நிக்கொதேமுவுக்கு ஆவிக்குரிய சத்தியத்தைச் சுட்டிக்காட்டிய போதிலும், அவர் இம்மைக்குரிய அளவில்தான் யோசித்தார். அந்தப் பெண்ணும்கூட தண்ணீர்பற்றி இயேசு சொன்னதை இம்மைக்குரிய அளவிலேயே யோசித்தாள்; ஆனால் இயேசுவோ ஆவிக்குரிய ரீதியாகப் பேசினார்.

ஜீவத்தண்ணீரை, தாம் கொடுப்பதாக இயேசு சொன்னதும் அந்தப் பெண், 'எனக்குத் தாகமுண்டாகாமல் இருக்க அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்' என்றாள். யோவான் 4:15. இயேசு அந்தத் தண்ணீரைக் கொடுத்தால், இனி அந்தக் கிணற்றுக்குச் செல்லவேண்டாம், பிறரை நேரடியாகச் சந்திக்கிற வாய்ப்பைக் குறைக்கலாம் என்று யோசித்தாள். இயேசு அவளிடம் குடிக்க தண்ணீர் கேட்ட நிலையில், அந்தப் பெண் அவரிடம் தண்ணீர் கேட்பதாகப் பேச்சு மாறியது குறிப்பிடத்தக்கது.

**அவ்வாறு அவள் கேட்டபோது, இயேசு என்ன சொன்னார்? யோவான் 4:16.**

---

இயேசு சட்டென பேச்சை மாற்றி, 'உன் புருஷனை அழைத்துவா' என்று அவளிடம் சொல்லுகிறார். பேசிவந்த விஷயத்திலிருந்து சட்டென மாறியது ஏன்? அத்தகைய கேள்வியைத் தவிர்க்கிற வகையில் அவளது செயல்கள் இருந்தன. இயேசுவால் இருதயத்தை வாசிக்கமுடியும். அவளும் தன் உண்மையான நிலையை அறிந்தால்தான் குணப்பட முடியும். அவர் கொடுக்க ஏங்கின ஈவை இந்த ஆத்துமா பெற்றுக்கொள்வதற்குமுன், தன் பாவத்தையும் தன் இரட்சகரையும் அவள் அடையாளம் காணவேண்டியிருந்தது.

# இயேசுவின் வெளிப்பாடு

**அந்தப் பெண்ணின் உள்ளான இரகசியங்கள் தமக்குத் தெரியுமென்பதை இயேசு எவ் வாறு காண்பித்தார்? அதற்கு அவள் எவ்வாறு செயல்பட்டாள்? யோவான் 4:16-24.**

---

---

உண்மை, பளீர் வெளிச்சம்போல அவளைத் திகைக்கச் செய்கிறது. இயேசுவைத் தீர்க்கதரிசியென உணர்ந்தபோதிலும், மீண்டும் கேள்வியைத் தவிர்க்க முயலுகிறாள். யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையே தொழுகை இடம்பற்றி நிலவின சர்ச்சையான கேள்வியை எழுப்புகிறாள்.

அதற்குப் பதிலாக, சமாரியர்கள் தாங்கள் அறியாததைத் தொழுதுகொள் வதாக இயேசு சொன்னார். அவர்களது தொழுகை யூதேயமார்க்கமும் அஞ் ஞானமார்க்கமும் கலந்திருந்தது. யூதர்கள் தம்மை வெளிப்படுத்துகிற தேவ னைத் தொழுதுகொண்டார்கள்; இது சமாரியர்கள் ஒத்துக்கொள்ளவேண்டிய மற்றொரு விஷயமாக இருந்தது.

மெய்த்தேவனைத் தொழுவது இடம் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. எனவே தொழுகை இடம்பற்றிப் பேசுவது பொருத்தமற்ற பேச்சாக இருந்தது. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுகிறவர்கள் ஆவியோடும் உண்மை யோடும் அவரைத் தொழவேண்டும். இயேசு சொன்ன அந்தத் தெளிவான சத் தியத்தை அந்தப் பெண் ஏற்றுக்கொண்டாள்; இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள ஆயத்தமாக இருந்தாள்.

**தாம் யாரென்பதை இயேசு எவ்வாறு அவளுக்கு வெளிப்படுத்தினார்? யோவான் 4:25,26.**

---

நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் இந்தப் பகுதியில்மட்டுமே, இயேசு தாம் விசாரிக்கப்படுவதற்கு முன் தம்மை மேசியாவென்று நேரடியாகச் சொல்லு கிறார். அதைப் பெரிய கூட்டத்திற்கோ முக்கியமான நபருக்கோ அல்ல, மாறாக யாக்கோபின் கிணற்றிற்குத் தனியாக வந்த, பெயர்சொல்லப்படாத ஒரு சமா ரியப் பெண்ணிடம் சொன்னார். யாருமில்லையே என்று தனிமையில் வாடுகிற எந்த ஆத்துமாமீதும் அவர் அக்கறைகாட்டுகிறார்.

மேலும் அவள் அந்நிய கலாச்சாரத்தைச் சேர்ந்தவள்; சொல்லிக்கொள்கிற அளவுக்கு ஒழுக்க குணம் இல்லாதவள்; அவளிடம் தாம் யாரென இயேசு வெளிப்படுத்துகிறார். அவளது உள்ளான இரகசியங்களைதாம் அறிந்திருந்ததை வெளிப்படுத்தியதால், அவள் தம்மேல் விசுவாசம் வைப்பதற்கான மிகப்பெரிய காரணத்தையும் அவளுக்குக் கொடுத்தார்.

---

**மனிதர்கள் ஒருவருக்கொருவர் இடையே எழுப்பியுள்ள தடைகளை சுவிசேஷம் உடைக்க வேண்டியதுபற்றி இந்தச் சம்பவம் சொல்லுவது என்ன?**

# சமாரியர்களின் சாட்சி

**அந்தப் பெண்ணின் ஆச்சரியமான செயல் என்ன? யோவான் 4:27-29.**

இயேசுவுக்கும் அந்தப் பெண்ணுக்கும் இடையே நடந்த உரையாடல் சீடர்களின் வருகையால் தடைபடுகிறது. ஒரு பெண்ணிடம் அவர் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தாலும், அதுபற்றி அவரிடம் கேட்கவில்லை. மாறாக, அவரை போஜனம்பண்ணச் சொல்லுகிறார்கள்.

அந்தச் சமயத்தில் அந்தப் பெண் தன் குடத்தை அங்கே வைத்துவிட்டு, இயேசுவோடு தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லும்படிக்குப் பட்டணத்திற்குள் விரைகிறாள்.

**அதன்பிறகு என்ன நடந்தது? சுவிசேஷத்தைப் பரப்புகிற வழிபற்றி அது என்ன கற்றுக்கொடுக்கிறது? யோவான் 4:30-42.**

அந்தப் பட்டணத்தில் அநேகர் மனந்திரும்ப இருந்ததுபற்றிப் பேசாமல், அறுவடையைப்பற்றி இயேசு பேசினது விநோதமாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள நிகழ்வுகளை இயேசு தெளிவாகப் புரிந்திருந்ததை யோவான் நமக்குக் காட்ட விரும்புகிறார். போஜனம்பண்ணுவதைவிட ஒரு சமாரியப் பெண்ணிடம் இரட்சிப்பின் திட்டம்பற்றிப் பேசுவது இயேசுவுக்கு முக்கியமானதாக இருந்தது. ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு வழிநடத்துவதே அவரது நோக்கம்; எல்லா மக்களுக்கும், தங்களைப் போல இல்லாதவர்களுக்கும் அவசரமாக சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டியதை, சீடர்களுக்குப் போதிக்க இயேசு அந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

யோவான் சுவிசேஷத்தில் பல முக்கியமான வேதபகுதிகள் உள்ளன. அவற்றில் யோவான் 4:3-42உம் ஒன்று. ‘நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார்’ என்று அந்தப் பெண் சொன்ன சாட்சியின்நிமித்தம் சமாரியர்கள் பலர் விசுவாசம் வைத்தார்கள். யோவான் 4:39.

தங்களிடத்தில் தங்கும்படி சமாரியர்கள் இயேசுவிடம் கேட்டுக்கொண்டார்கள். இயேசு போதித்த வார்த்தையால் மேலும் அநேகர் அவரை விசுவாசித்தார்கள். அந்தப் பட்டணத்தார் அந்த ஸ்திரீயை நோக்கி, ‘உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்’ என்றார்கள். யோவான் 4:42.

**ஒரே ஒரு நபருடைய சாட்சிகூட எவ்வளவு ஆற்றல்மிக்கதாக இருக்கலாம் என்பதுபற்றி அந்தச் சம்பவம் என்ன சொல்லுகிறது? இயேசு உங்கள் வாழ்க்கையில் செய்தவற்றிற்கு நீங்கள் எவ்வளவு ஆற்றல்மிக்க சாட்சியாக இருக்கிறீர்கள்?**

# மேலும் படிக்க:

'அந்தச் சமாரியப்பெண் இரட்சகரைக் கண்டுகொண்டதும், மற்றவர்களை அவரிடம் அழைத்து வந்தாள். அவரது சொந்த சீடர்களைவிட தான் ஆற்றல்மிக்க ஊழியக்காரி என்று நிரூபித்தாள். ஊக்கமிக்க ஊழியக்களமாக சமாரியாவில் எதையும் சீடர்கள் காணவில்லை. எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய ஒரு மாபெரும் பணியின்மீதுதான் அவர்களது எண்ணங்களெல்லாம் இருந்தன. தங்களைச் சுற்றி ஓர் அறுவடை இடம் இருந்ததை அவர்கள் காணவில்லை. ஆனால் அவர்கள் வெறுத்த ஒரு பெண்ணின் மூலமாக ஒரு முழுப்பட்டணமே இரட்சகரைப்பற்றிக் கேள்விப்பட்டது. அவள் அந்த வெளிச்சத்தை உடனடியாகத் தன் தேசத்தினருக்குக் கொண்டுசென்றாள்.

கிறிஸ்துமீதான நடைமுறை விசுவாசத்திற்கு அந்தப் பெண் ஓர்எடுத்துக்காட்டு. ஒவ்வொரு மெய்யான சீடனும் தேவனுடைய ராஜ்யத்தில் ஓர் ஊழியனாகப் பிறந்திருக்கிறான். ஜீவத்தண்ணீரிலிருந்து பருகுகிறவன் ஜீவ நீரூற்றாக மாறுகிறான். பெற்றுக் கொள்கிறவன் கொடுக்கிறவனாகிறான். ஆத்துமாவில் காணப்படுகிற கிறிஸ்துவின் கிருபை வனாந்தரத்திலுள்ள ஒரு நீரூற்றைப்போல, பொங்கி சகலத்தையும் பசுமையாக்குகிறது; அழிகிற நிலையில் இருப்பவர்களை ஜீவத்தண்ணீரிலிருந்து பருகும்படிச் செய்கிறது'.[1]

[1] Ellen G. White, The Desire of Ages, p. 195.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *வகுப்பில், ஞாயிற்றுக்கிழமை கடைசிக் கேள்வியைத் தியானியுங்கள். பிறருக்கு நீங்கள் சாட்சிபகராதபடிக்கு உங்கள் சமுதாயத்தில் காணப்படுகிற சமூகத்தடைகளும் தப்பெண்ணங்களும் யாவை?*

2. *இயேசு தம் சொந்த மக்கள் மத்தியில் பெற்ற வரவேற்பைவிட, சமாரியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றதற்கான காரணம் என்ன?*

3. *அந்தச் சமாரியப்பெண்ணின் இடத்தில் உங்களை வைத்துப் பாருங்கள். அவளுக்குக் கொஞ்சமும் அறிமுகமற்ற ஒரு நபர் சென்று, அவளுடைய உள்ளான இரகசியங் களைத் தாம் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறார். முன்பின் அறிமுகமற்ற ஒரு நபர் எவ்வாறு அவற்றை அறிந்திருக்க முடியும்? அதனால்தான் இயேசுவின்மீது ஈடுபாடு ஏற்பட்டது. நம்மைப்பற்றி ஆண்டவருக்கு எல்லாம் தெரியும்; பிறர் அறிய விரும்பக் கூடாதென நாம் விரும்புகிற இருளான இரகசியங்களும் தெரியும் என்பதுபற்றி இது சொல்லுவது என்ன? அவர் நம் இரகசியங்களை அறிந்திருந்தாலும், அவர் நம்மை எவ்வாறு நடத்தவிரும்புகிறார் என்பதுபற்றி அந்தப் பெண்ணை அவர் நடத்திய விதம் என்ன சொல்லுகிறது? இந்த உண்மையிலிருந்து என்ன ஆறுதலைப் பெறலாம்?*

4. *யோவான் சுவிசேஷத்தில் இதுவரை நாம் படித்த என்ன கருத்துகள், கிணற்றண்டை வந்த சமாரிய ஸ்திரீக்குச் செய்த ஊழியத்தில் காணப்படுகின்றன?*

# கேட்காமலேயே அஞ்சலில் வந்த புத்தகம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

ஓய்வுபெற்ற கப்பல்படை அதிகாரி ராப் ஷெட்கி; வாழ்நாள் முழுவதும் வேதாகமம் குறித்த கேள்வியுடன் இருந்தவர். முன்பு சந்தேகவாதியாக இருந்து, பின்பு தேவசித்தத்தை அறிந்துகொள்ள விரும்பினார்; ஆனால் ஓய்வுநாள் அவருக்கு தடுமாற்றமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமையில் ஆலயம் செல்லாமல், வேறு செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது அவருக்கு கோபம் வந்தது. "ஞாயிற்றுக்கிழமையில் ஏன் கோல்ஃப் விளையாடுகிறீர்கள்" என்று கேட்பார். ஆனால், மனதிற்குள்ளாக, தேவன் ஓய்வுநாளை மாற்றினாரா என்கிற கேள்வி இருந்தது. சபைக்குச் செல்வதை நிறுத்தினார். அலாஸ்கா மாகாணத்தில், ஃபேர்பேங்ஸ் எனுமிடத்தில் ஏதாவது புதிய சபைக்குச் செல்லலாம் என்று தேடினார். அப்போதுதான் அவர் கேளாமலேயே ஒரு புத்தகம் அஞ்சலில் வந்தது. "மாபெரும் போராட்டம் என்கிற தலைப்பு ஈர்ப்பாக இருந்தது. அது என்னவாக இருக்குமென யோசித்தேன்" என்று சொன்னார்.

வீட்டிற்குச் சென்றுதும் அதை தீவிரமாக வாசிக்க ஆரம்பித்தார். தேவனல்ல, மனிதர்கள்தாம் ஓய்வுநாளை மாற்றினார்கள் என்பதை அறிந்துகொண்டார். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது! சபை வரலாறுபற்றி அதில் சொல்லப்பட்டிருந்த விதம் உண்மையெனப் புரிந்தது. நண்பர் ஒருவரைத் தொடர்புகொண்டு, "கிறிஸ்தவத்தின் வரலாறுகுறித்து புதிதாக அறிந்துவருகிறேன். அந்தப் புத்தகத்தின் பெயர் மாபெரும் போராட்டம்" என்று சொன்னார். பிறகு அந்த நண்பர் இவரைத் தொடர்புகொண்டு, "அந்தப் புத்தகத்தை வாசிக்காதே. அது செவந்த்–டே அட்வென்டிஸ்ட் என்கிற மதத்தீவிர கூட்டத்தாருடையது" என்றார்.

ராப்புக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் எலன் ஒய்ட் என்பதையும், அவர் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் இணை நிறுவனர் என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை. "அப்படியில்லை, அவர்கள் தேவ வார்த்தையை விசுவாசிப்பவர்கள்" என்று சொன்னார். அதன்பிறகு, ஃபேர்பேங்ஸில் அட்வென்டிஸ்டுகள் எங்கு கூடுகிறார்களென ஆன்லைனில் தேடிப்பார்த்தார். 10 நிமிட கார்பயணத் தூரத்தில் ஒரு சபை இருந்தது. ஓய்வுநாளில், வேதாகமத்தையும் மாபெரும் போராட்டம் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு, அந்தச் சபைக்குச் சென்றார். ஒரு மாத காலமாக அந்தப் புத்தகத்தை வாசித்து வந்தார்.

அவர் ஆலயத்திற்குள் சென்றதும், ஓய்வுநாள் பள்ளி ஆசிரியையான ஹெலன் அவரை வரவேற்றார். மாபெரும் போராட்டம் புத்தகத்தை வாசித்து அவர் வந்திருக்கிறார் என்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. "என் குற்றச்சாட்டுகளை நீங்கள் போக்கிவிட்டீர்கள்" என்று சொன்னார்.

ஏனென்றால் மாபெரும் போராட்டம் புத்தகம் சிறிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருப்பதால், அதை வாசிக்க கடினமெனக் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் ராப், அந்தப் புத்தகத்தில் நான்கில் மூன்று பகுதியை வாசித்து முடித்திருந்தார். அதிகம் அறிந்துகொள்வதற்காக ஆலயத்திற்கு வந்தார்.



ஏழு வருடங்கள் கழித்து, ராப் அட்வென்டிஸ்ட் சபையின் உதவிக்காரரானார். அவருக்கு 70 வயது. இப்போதும் எலன் ஒய்ட் புத்தகங்களை வாசிக்கிறார். "செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபை என் குடும்பமாக மாறியிருக்கிறது, சத்தியத்தைக் கண்டு கொண்டேன்" என்றார்.